செய்தி வெளியீடு எண்: 117 நாள்: 19.02.2018

## காவேரி பிரச்சனையில் உச்சநீதிமன்ற தீர்ப்பின் மீது எடுக்கப்பட வேண்டிய அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து விவாதிக்க அனைத்துக் கட்சிக் கூட்டம்

## செய்தி வெளியீடு

காவேரி நடுவர் மன்றம் 5.2.2007 அன்று பிறப்பித்த தீர்ப்பினை எதிர்த்து, கர்நாடகா, கேரளா மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்கள் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த சிவில் வழக்குகள் மீது 16.2.2018 அன்று உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பினை வழங்கியது.

தமிழ்நாட்டின் உரிமைகளையும், வேளாண் பெருமக்களின் நலன்களையும் கண்ணின் மணிபோல எப்போதும் காக்கும் மாண்புமிகு அம்மாவின் அரசு, இத்தீர்ப்பு வெளியான அன்றைய தினமே (16.2.2018), அதனை முழுமையாக ஆராய்ந்து சாதகமான அம்சங்களை விரைந்து முன்னெடுத்துச் செல்லவும், நமக்குரிய காவேரி நதி நீரினை முழுமையாக பெறவும், சட்ட வல்லுநர்களின் ஆலோசனையைப் பெற்று, தேவையான தொடர் நடவடிக்கைகளை விரைவாகவும், உறுதியாகவும் எடுக்கும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்திருந்தார்கள்.

உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு குறித்து சட்ட ஆலோசகர்களுடன் கலந்தாய்வு செய்யப்பட்டு வருகிறது. இப்பிரச்சனையில், தமிழ் நாட்டின் உரிமைகளை நிலைநாட்டவும், காவேரி நதிநீரைக்கொண்டு விவசாயம் செய்து வரும் தமிழ்நாடு வேளாண் பெருங்குடி மக்களின் நலனை தொடர்ந்து பேணிக்காக்கவும், உச்சநீதிமன்றம் 16.2.2018 அன்று பிறப்பித்துள்ள தீர்ப்பின்மீது எடுக்கப்பட வேண்டிய மேல்நடவடிக்கைகள் குறித்து அனைத்துக்கட்சி தலைவர்களுடன் கலந்தாலோசித்து முடிவெடுப்பதற்கு ஏதுவாக 22.2.2018 அன்று காலை 10.30 மணியளவில் தலைமைச் செயலகத்தில் நாமக்கல் கவிஞர் மாளிகையின் பத்தாவது தளத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் அனைத்துக்கட்சி கூட்டம் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் அனைத்துக்கட்சி தலைவர்களுடன் கலந்தாலோசித்து, அவர்களின் கருத்துக்களை பெற்று, அடுத்தக்கட்ட நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு உடனடியாக எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

*******

**வெளியீடு : இயக்குநர், செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.**

**நாள் : 19.2.2018**